முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No. 19/2023

தேதி : 26-06-2025

(வா.சா.2) – திரு.சிவானந்தம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வாதி என் நண்பரா அல்லது உறவினரா என்றால் நண்பர். நான் திருப்பூர் மாவட்டத்தில் வசிக்கிறேன் என்றும், வாதி மற்றும் பிரதிவாதி திண்டுக்கல் மாவட்டத்தில் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். பிரதிவாதியை கிரைய ஒப்பந்தம் போட்ட அன்று தான் தெரியும் என்றால் இல்லை, முன்பு தெரியும் அவர் பக்கத்து தோட்டத்துக்காரர். வழக்கு சொத்தானது பிரதிவாதியின் தனிச்சொத்தா கூட்டுச்சொத்தா என்றால் தெரியாது. சொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் பிரதிவாதியின் பெயரில் உள்ளது. விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியும். வாதி பிரதிவாதிகளுக்கு என்ன வரவு செலவு உள்ளது என்றும், எதற்காக கிரைய ஒப்பந்தம் போட்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, தெரியும்., வழக்கு சொத்தை பிரதிவாதி கிரையம் செய்து தருவதாக வாதியிடம் சொன்னார், வாதி அதை வாங்க ஒப்புக்கொண்டு கிரைய ஒப்பந்தம் போட்டுக்கொண்டார்கள். வாதியிடம் பிரதிவாதி பெற்ற ரூ.1.5லட்சம் கடனின் பொறுப்பிற்காக கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டது என்றும், நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அ ளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி பைனான்ஸ் தொழில் செய்வதால் அவ்வப்போது அவரிடம் நான் கடன் வாங்குவதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றும், அவர்களுக்கிடைய நடந்த விபரம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

ஒம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.